**அ.சண்முக சுந்தரம், இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சியர்,**
**வேலூர் மாவட்டம்**

தொலைபேசி எண் : 0416-2252501, 2253512
தலைமையகம் : 0416 - 2252345
இல்லம் : 0416 - 2222000
நிகரி : அலுவலகம் : 0416 - 2253034
இல்லம் : 0416 - 2228029
செல் : 9444135000
மின் அஞ்சல் : collector.tnvlr@nic.in



# என் அன்பான தம்பி / தங்கைக்கு அண்ணனின் அன்பு மடல்!

நமது வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து குழந்தை செல்வங்களாகிய உங்களுடன் நேரில் பேசிட எனக்கு ஆவலாக உள்ளது. ஆனால் அதற்கான கால அவகாசம் இல்லாத காரணத்தினால் இக்கடிதம் மூலம் உங்களுடன் நான் பேசுவதில் எல்லையற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். குழந்தைகள் என்றாலே "0 முதல் 18" வயதிற்குட்பட்டவர்கள். மேலும், மகிழ்ச்சி, குதுகலம், கொண்டாட்டமாக இருக்கப்பட வேண்டியவர்கள். இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் **உயிர் வாழ்வதற்கான உரிமை, வளர்ச்சிக்கான உரிமை, பாதுகாப்பிற்கான உரிமை மற்றும் பங்கேற்பிற்க்கான உரிமைகள்** உள்ளன.

**"நவம்பர் 14ஆம் தேதி குழந்தைகள் தினமான"** இன்று அனைத்து குழந்தைகளுக்கும் என்னுடைய மனமார்ந்த குழந்தைகள் தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இத்தினத்தில் ஒவ்வொரு குழந்தையும் அவரவர் ஆரோக்கியம், விளையாட்டு, கல்வி ஆகிய முன்னேற்றங்களுடன் சமூக செயல்பாடுகளில் அக்கறை காட்டி **"மாற்றம் தந்த மாமனிதர்"**-களாக மாற அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். உங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு என்பது இந்நாட்டின் வளர்ச்சிக்கு மிக முக்கிய அடிக்கல் என்பதால் இது குறித்து உங்களுக்கும், நீங்கள் மற்றவர்களுக்கு உதவிடும் வகையிலும் சில ஆலோசனைகளை கூறவுள்ளேன்.

யாரேனும் உங்களிடம் பாலியல் நோக்கத்தோடு தொட முயற்சித்தால் அவர்களை **தொட விடாதே! எதிர்த்து நில்! சத்தமாக கூச்சலிடு! உடனடியாக அந்த இடத்தை விட்டு ஓடு! உங்களுக்கு நம்பிக்கையானவர்களிடம் உடனடியாக சொல்லிவிடு!** உங்களுக்காக உதவி செய்ய தயாராக உள்ள நம்முடைய 24 மணிநேர இலவச தொலைபேசி எண் சைல்டுலைன் 1098 மூலம் கூறி உதவி கேள்!. இதன் மூலம் உனது பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும் நம் மாவட்டத்தில் குழந்தை திருமணம் தடுத்தல் பற்றிய விவரங்களை தெரிந்து கொள்வது மிக அவசியமாகும். இதன்படி **18 வயது பூர்த்தியடையாத பெண் குழந்தைக்கும், 21 வயது பூர்த்தியடையாத ஆணுக்கும்** திருமணம் நடத்தி வைப்பது, திருமணம் ஏற்பாடு செய்வது, வற்புறுத்துவது போன்ற செயல்கள் குழந்தைத் திருமணம் என்றும் தண்டனைக்குறிய செயல் எனவும் **குழந்தைத் திருமணம் தடுப்பு சட்டம், 2006** வலியுறுத்துகிறது. எனவே இதிலிருந்து உங்களை பாதுகாத்து கொள்ள **சைல்டுலைன் 1098** அழைத்து உதவிக்கேளுங்கள்.

மேலும், குழந்தைத் தொழிலாளர்கள், ஆதரவற்ற குழந்தைகள், பிச்சையெடுக்கும் குழந்தைகள், கொடுமைக்கு இரையாகும் குழந்தைகள், வீட்டை விட்டு ஓடிப்போகும் குழந்தைகள், காணாமல் போகும் குழந்தைகள், பள்ளி செல்லா/பள்ளி இடைநின்ற குழந்தைகள், கடத்தப்படுகின்ற குழந்தைகள், மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகள் போன்ற பிரச்சனைகளில் தவிக்கும் குழந்தைகளுக்கு உதவிட **சைல்டுலைன் 1098** என்ற எண்ணை அழைக்கவும்.

நம் மாவட்டத்தில் உங்களுக்காக உதவி செய்ய நானும், குழந்தைகள் நலன் மற்றும் பாதுகாப்பு சார்ந்த அலுவலர்களும் இருக்கின்றோம். உங்களுக்காக உதவும் மாவட்ட அலுவலர்கள் சிலரின் தொலைபேசி எண்களை பதிவிட்டுள்ளேன். உதவி தேவைப்படும்போது இந்த எண்களை பயன்படுத்திக்கொள்ளுங்கள். மேலும் நமது மாவட்டத்தை குழந்தை நேயமிக்க மாவட்டமாக மாற்றிட அனைவரும் ஒன்றிணைவோம்.

| | |
|---|---|
| **மாவட்ட ஆட்சியரின் வாட்ஸ்ஆப் புகார் எண்** | : 9498035000 |
| **சைல்டுலைன் இலவச தொலைபேசி எண்** | : 1098 |
| **மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்** | : 0416 - 2222310 |
| **மாவட்ட குழந்தைகள் நல குழு** | : 04172 - 278175 |
| **மாவட்ட சமூக நல அலுவலர்** | : 0416 - 2252663 |
| **சைல்டுலைன் அலுவலகம்** | : 9381875448 |

நல்வாழ்த்துக்களுடன்,

**அ.சண்முக சுந்தரம், இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர்

**குழந்தைகள் நலன் கருதி வெளியிடுவோர்**

HAND IN HAND INDIA

CHILD LINE

## CHILDLINE Oath for Children

நான் எனது தோழி/தோழனுக்கு

உதவி தேவைப்படும் போது
1098-ஐ அழைப்பேன் எனவும்....

அவர்களுக்கு எதிராக
நிகழக்கூடிய அனைத்து
தீங்குகள் மற்றும் தீங்கிழைப்பவர்களுக்கு
எதிராக குரல் கொடுப்பேன் எனவும்...

குழந்தைகளுக்கெதிரான குற்றங்கள் இல்லாத
குழந்தை நேய சமூகத்தை உருவாக்குவதோடு

எனது தோழியை/தோழனை
மரியாதையோடும், மதிப்போடும், தோழமையோடும்
நடத்துவேன் என உறுதி கூறுகிறேன்.